REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4) சென்னை: மார்கழி 22உ சனி (5—1—57) ★ ★ வெளியூர்: மார்கழி 23உ ஞாயிறு (6—1—57) [இதழ் 180

வருமானத்திற்கு வரம்பு நிர்ணயிக்க மறுக்கிறார் பண்டிதர்!

இந்தூர், சன. 4—

ஒவ்வொருவர் வருமானத்திற்கும் வரம்புகட்டவேண்டும் என்ற யோசனையை பண்டித நேரு நிராகரித்து விட்டாராம்!

'முக்கியமானது என்னவென்றால் ஒவ்வொருவரது குறைந்தபட்ச வருமானத்தை நிர்ணயிக்க வேண்டுவதே' என்றும் அவர் கூறியுள்ளாராம்!

பத்தினி வேஷம் போட வேண்டுமாம்!

சத்தியமே பேச வேண்டுமாம்!

செய்யத் தவறியதையும் செய்திருக்க வேண்டியதையும் மக்களிடம் கூறவேண்டுமாம்!

காங்கிரசாருக்கு நேரு பண்டிதர் ஞானோபதேசம்

இந்தூர், சன. 4—

"இந்திய மக்களை நாம் திறந்த மனதோடு அணுகவேண்டும்; தங்கு தடையின்றி அவர்களிடத்தில் உண்மையைக் கூறவேண்டும்; ஒளிவு மறைவின்றி, நாம் என்னவெல்லாம் செய்யவில்லை என்பதை ஒப்பவேண்டும்; என்னவெல்லாம் செய்திருக்கவேண்டும் என்பதை எடுத்துரைக்கவேண்டும்; என்ன செய்துள்ளோம் என்பதையும் கூறவேண்டும்"

என்று பண்டிதநேரு காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சிக் கூட்டத்தில் பேசும்போது கூறினாராம்.

விட்டுக்கொடுத்தால்

"நமது எதிரிகள் எல்லா வகையான தொல்லையும் தருவர்; ஆனால், அவற்றை, கொள்கைகளை விட்டுக்கொடுத்து சரிக்கட்ட நினைக்கக் கூடாது" என்றும் அவர் கூறினாராம்!

வெற்றிக்காக!

"ஸ்தல வெற்றிகளுக்காக, ஏதாவது விரும்பத் தகாத கோஷ்டிகளின் ஆதரவைப்பெறும் முயற்சியில் ஈடுபட்டு தங்களைத் தாங்களே குறைத்துக்கொள்ளக் கூடாது; காங்கிரசார், தேர்தலை தங்கள் முழுபலத்துடனும் தாக்குதல் நோக்கோடு அணுக வேண்டுமே தவிர தற்காப்பு நோக்குடன் அல்ல" என்றும் அவர் உபதேசம் புரிந்திருக்கிறாராம்!

சுத்தமானதல்ல!

"காங்கிரசின் இதயம் சுத்தமானது — அப்பழுக்கற்றது என்று கூறிட நான் தயார் இல்லை. ஆனாலும், இன்னும் நாம் இருதய சுத்தி பெற்றிருக்கிறோம். அதுதான் நமக்கு வலுவைத் தருகிறது. அந்த கொஞ்சநஞ்ச சுத்தியையும் நாம் இழந்துவிட்டோமானால், நாம் அழிந்து படுவோம்! எனவே, நாம், பொதுத் தேர்தலுக்காகவோ அல்லது வேறு ஸ்தலத் தேர்தலுக்காகவோ நம்மை நாம் இழிவு படுத்திக்கொள்ளக் கூடாது" என்றும் அவர் கூறினாராம்!

ஆசிரியர்களுக்கு வேலைக்காரர்களை விடச் சம்பளம் குறைவாயிருக்கிறதே!

நேரு முதலைக் கண்ணீர் வடிக்கிறார்

இந்தூர், சன. 4—

"டில்லியில் காவல்காரர்களுக்கும் பணியாட்களுக்கும் தரப்படும் ஊதியத்தைவிட ஆசிரியர்களுக்குக் குறைவாகவே சம்பளம் தரப்படுகிறது. இந்நிலை கண்டு நான் வெட்கப்படுகிறேன்" என்று, பண்டித நேரு கூறினாராம்!

"நாட்டை உருவாக்குபவர்கள், எதிர்காலச் சந்ததியினரைத் தயாரிப்பவர்கள் ஆசிரியர்கள் தான்; அவர்கள் மிகக் குறைவான சம்பளம் பெறுவது மிக வருந்தத்தக்கதாகும்" என்றும் அவர் முதலைக் கண்ணீர் வடித்தாராம்!

பொன்வயலில் வேலைநிறுத்தம்

இராபர்ட்சன்பேட்டை, சன 4—

இங்குள்ள பொன்வயலில் வேலை செய்யும் 11 500 தொழிலாளர்கள் இன்று வேலை நிறுத்தம் செய்தனர். 1953–54-ம் ஆண்டுக்கு மத்தியத் தொழில் மன்றத்தின் தீர்ப்பின்படி போனஸ் வழங்கவேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

கோவாமீது இந்தியா விதித்துள்ள தடை

முறிப்பதற்கு பாகிஸ்தான் உதவுமாம்

சவர்த்வாடி, சன. 4—

கோவாமீது இந்தியா விதித்திருக்கும் 'பொருளாதார முட்டுக்கட்டை'யைத் தகர்க்கும் வகையில், பாகிஸ்தான் கோவாவுடன் நெருங்கிய வர்த்தகத் தொடர்புகொள்ளும் என்றும், இதற்காகக் கராச்சியிலிருந்து கோவாவிற்கு வர்த்தகத் தூதுக்குழு ஒன்று புறப்பட்டுவிட்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

பத்தாண்டுக் கால கொடுங்கோன்மை

பொருளாதாரச் சீர்குலைவுக்கு இரகசியப் போலீசாரின் போக்கே காரணம்

கம்யூனிஸ்டுகள் ஆட்சியிலிருக்கும் வரையில் ஹங்கேரிக்குத் திரும்பவேமாட்டோம்

அகதிகள் தரும் தகவல்

கல்கத்தா, ஜன. 4—

"கொடுமையான கம்யூனிஸ்டு ஆட்சியில் கடந்த பத்து ஆண்டுகளில் ஓர் இரவுகூட மக்கள் நிம்மதியாக, அமைதியாக இருந்தது இல்லை.

"'ஏ வி. எச்.' என்று அழைக்கப்படும் ஹங்கேரிய இரகசியப் போலீசாரும் அவர்களது ஏஜெண்டுகளும்தான், ஹங்கேரியின் பொருளாதாரச் சீர்குலைவுக்கும், அதைத் தொடர்ந்த எழுச்சிக்கும் காரணமானவர்கள்.

"இந்த இரகசியப் போலீசாருக்கு, மக்களின் தனிப்பட்ட வாழ்வில் புகுந்து அட்டகாசம் செய்யவும், அவர்களை எந்த வித நீதியுமின்றி நினைத்த மாத்திரத்தில் தூக்கிலிடவும் தாராளமான அனுமதி தரப்பட்டிருக்கிறது.

"தொழிலாள வர்க்கத்தவரும் விவசாயப் பெருமக்களும், கம்யூனிஸ்டுக் கட்சியையும், அதன் கொடுங்கோலாட்சியையும் வீழ்த்த ஆயிரக்கணக்கில் திரண்டெழுந்துள்ளனர்.

"நாங்கள், இனி கம்யூனிஸ்டுகள் ஆட்சியிலிருக்கும்வரை ஹங்கேரிக்குத் திரும்பப் போவதில்லை; நாங்கள் அமைதியாகவும் சுதந்திரத்துடனும் வாழ விரும்புகிறோம்,"

என்று, ஹங்கேரியிலிருந்து கொடுமை தாளாது ஓடிவந்துவிட்ட அகதிகளுள் ஒருவர், நியூசிலாந்து செல்லும் வழியில், இங்கு பத்திரிகையாளரிடம் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதுபோலப் பேசியிருப்பவர் 35 வயதான ஓட்டோ என்ற ஒரு எஞ்சினியர்; சர்க்காருக்குச் சொந்தமான புதாபெஸ்ட் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்தவர் என்றும் தெரியவருகிறது.

தகடுகள் வெட்டும் இயந்திர கருவிகள் உற்பத்தி

இந்தியாவிலேயே செய்வதற்குத் திட்டம்

புதுடில்லி, சன. 2—

பெங்களூரில் உள்ள இந்துஸ்தான் இயந்திரக் கருவி உற்பத்திச் சாலையில், இந்தியாவிலேயே முதல் தடவையாக தகடு வெட்டும் இயந்திரக் கருவிகளின் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதற்கான முயற்சிகள் உருவாகி வருகிறது.

அகமதாபாத் நகரில் அர்த்தால், கொந்தளிப்பு!

மகாகுசராத் தலைவர்கள் கைதானதின் எதிரொலி

அகமதாபாத், சன. 4—

தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ், 'மகாகுசராத் சனதா பரிஷத்' இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்களையும் ஊழியர்களையும் இன்று காலை போலீசார் கைது செய்ததை ஒட்டி, அகமதாபாத் நகரத்தில் பெரும் கொந்தளிப்புத் தோன்றியிருக்கிறது.

வெளியேறினர்

பல்லாயிரக்கணக்கான மாணவர்கள், கல்லூரிகளையும் பள்ளிகளையும் விட்டு வெளியேறி வேலை நிறுத்தம் செய்ததுடன், நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் வந்து, பரிஷத் தலைவர்களை விடுதலை செய்யக்கோரி குரல் எழுப்பியிருக்கின்றனர்.

கடையடைப்பு

நகரின் முக்கியமான தெருக்களில் உள்ள கடைகள் எல்லாம், மூடப்பட்டிருந்தன என்றும், பரிஷத், அர்த்தால் அனுஷ்டிக்குமாறு விடுத்த வேண்டுகோளின்படி வர்த்தக நிலையங்கள், கடைகள் எல்லாம் மூடப்பட்டன என்றும் தெரியவருகிறது.

ஏர்வாடா சிறையில்

கைது செய்யப்பட்டவர்கள் கடந்த டிசம்பர் 14-ந் தேதி முதல் 18-ந் தேதி வரையில் நகரில் அமைதிக்குப் பங்கம் விளைவித்தனர் என்று போலீசார் கூறுகின்றனராம். அவர்கள் அனைவரும் ஏர்வாடா சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

போக்குவரத்து

நகரின் முக்கிய தெருக்களில் எல்லாம் நகரசபை பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

பிரபல தலைவர்கள்

கைது செய்யப்பட்டோரில் பிரபல தலைவர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது; அத்துடன், இரு மாணவர்களும் கைதாகியுள்ளனராம்.

ஆத்திரமூட்டல்

இதுபோன்ற ஆத்திரமூட்டல்களினால் தூண்டப்பட்டாலும், மக்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், சர்க்காரின் இந்த சனநாயக விரோதமான நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்தும் பரிஷத் அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

வாஷிங்டன், சன. 4—

மத்திய தரைக் கடலில் இப்போதுள்ள அமெரிக்கக் கடற்படையில், ஒரு அணு பீரங்கிப் படை இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

கிழவியைத் தூக்கி மணவினை மனையில் வைக்கும் போக்கு!

ஒன்றரை கோடி ரூபாய் செலவில் சவமொழிப் பல்கலைக் கழகமாம்!

சாந்திகார், சன. 4—

'மகாபாரத யுத்தம்' நடந்த இடமான குருக்ஷேத்திரத்தில், ஒரு கோடியே 35 இலட்சம ரூபாய் செலவில் ஒரு சவமொழிப் பல்கலைக் கழகம் அமைக்கப்படவிருக்கிறதாம்!

இதற்கு பஞ்சாப் சர்க்கார் ரூ. 10 இலட்சம் வரை ஒதுக்கியுள்ளதாம்!

வரும் 11-ந் தேதியன்று குடியரசுத் தலைவர் இராசேந்திரர், இந்த கழகத்திற்குக் கால்கோள் விழாச் செய்வாராம்!

இடங்கள் ஒதுக்கும் முறை தேவையில்லையாம்!

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடங்கள் ஒதுக்கும் முறையை ரத்து செய்யுமாறு அ. இ. தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் கோரியுள்ளதாகத் தெரிகிறது.

மோசமான நிலைக்குப் பாதை வகுப்பவர்கள்!

"உழைக்காமல் பணம் திரட்டுவதுதான் மிகவும் மோசமானது. அத்தகைய நிலைக்கு பாதை வகுப்பதைத் தடுத்தாக வேண்டும்" என்று பண்டித நேரு, காரியக் கமிட்டி கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 5—1—'57 சனி

நீதியா? நியாயமா? முறையா?

பக்ரா-நங்கல், இராகுட், தாமோதர் பள்ளத்தாக்கு, கோசி போன்ற நீர்த்தேக்க அணைக்கட்டுத் திட்டங்களும், பெரும் பெரும் நீர் மின்சார உற்பத்தி நிலையங்களும் வடநாட்டிலேயே துவங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றனவென்றும், அவைபோன்ற திட்டங்களைத் தென்னாட்டில் தேடிப்பிடித்து நிறைவேற்றக் கூடாதா என்றும் எவருக்கும் கேட்கத்தான் தோன்றும். அவ்வாறு கேட்பது குறுகிய பாலையப் பற்றுகவோ, பரந்த நோக்க மற்றத் தன்மையாகவோ ஒருக்காலும் இருக்கவே இருக்காது.

குறிப்பிட்ட ஒரு பகுதியில் வசித்துவரும் மக்கள், வேலையின்மைக்கும் வறுமைக்கும் தொத்து நோய்களுக்கும் ஆளாகிக்கொண்டு இருக்கும் பொழுது, ஒரே நாடு என்று சொல்லப்படுவதானாலும், குறிப்பிட்ட மற்றொரு பகுதியில் வசிக்கும் மக்கள் மட்டுமே உடனடியான வாழ்வு பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகளை இரு கையேந்தி வரவேற்பர் என எதிர்பார்ப்பது, என்றும் இயலாததாகும். அதுவுமன்றி, கிடைக்க இருக்கும் வசதிகளை உடனடியாக அனுபவிக்க இருக்கும் குறிப்பிட்ட பகுதிவாழ் மக்கள்மீது அதிருப்தி கொள்வதும் இயல்பேயாகும்.

பாலைவனத்தில் வாழும் மக்களே இத்தகு அதிருப்திக்கு ஆளாகிவிடுவர் என்றால், நாட்டின் எப்பகுதிகளுக்கும் குறையாதவகையில் இயற்கை வளத்துடன்கூடிய பகுதியில் வாழும் நமது மக்கள், வடநாட்டில் நிறைவேற்றப்பட்டுவரும், அப்பகுதி மக்களுக்கு மட்டுமே உடனடியாக நல்வாழ்வு அளிக்கக்கூடிய ஏற்பாடுகளைக் கண்டு பெருத்த அளவில் அதிருப்தி கொள்ளத்தான் செய்வர்.

வடநாட்டில் நிறைவேற்றப்பட்டுவரும் நல்வாழ்வுத் திட்டங்கள் அனைத்தும் இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் உள்ள மக்களின் பொதுச் சொத்து—துணைக்கண்ட மக்கள் அனைவருடையவும் பொதுவுடைமை—என்று, வடநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள முன்னேற்ற ஏற்பாடுகளைக் குறித்து வடநாட்டுத் தலைவர்கள் போதித்துவருகின்றனர். அப்போதனையின் பொருள் தெரிந்தோ தெரியாமலோ, இங்குள்ள 'பச்சைத் தமிழர்' ஆட்சியினரும் அப்போதனையைத் திரும்பத் திரும்பப் பாராயணம் பண்ணிவருகின்றனர்.

பக்ரா-நங்கல் நீர்த்தேக்கத் திட்டம்—அதையொட்டிய நீர் மின்சாரத் திட்டங்கள்போன்ற ஏற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கான இமயமும், அதில் தோன்றி ஓடிவரும் சிந்து ஜீவநதியும் தென்னாட்டில் இல்லாது இருக்கக்கூடும். ஆனால், குந்தா நீர் மின்சார உற்பத்தித் திட்டத்தை முதல் திட்டக் காலத்திலேயே செயலாற்றி முடிக்கவேண்டும் என்ற நினைப்பு இந்தியப் பேரரசிற்கு ஏன் வராமற்போயிற்று? பல கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றக்கூடிய பக்ரா-நங்கல் திட்டத்தை முதல் திட்டக் காலத்திலேயே மேற்கொள்ளுவதற்கு முன்வந்த இந்தியப் பேரரசு, அதே காலத்தில் குறைந்த செலவில் நிறைவேற்றக்கூடிய குந்தா திட்டத்தை மேற்கொள்ள முன்வராததற்கு எது காரணம்?

பணமுடைதான் காரணம் என்றால், பக்ரா-நங்கல் திட்டத்திற்கான பல கோடி ரூபாய் இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்த இந்தியப் பேரரசிற்கு, குந்தா திட்டத்திற்குத் தேவையான முப்பது கோடி ரூபாய் இருக்கும் இடத்தைத் தேடிப் பிடிப்பது அதன் சக்திக்கு மீறிய செயலாக இருக்க முடியுமா?

மின்சாரக் குறைவின் காரணமாகவே, இங்கு பூமிக்கடியிலிருந்து பலவகை மூலப் பொருட்கள் கிடைத்தபோதிலும்கூட, அவைகளைக்கொண்டு புதுப்புதுத் தொழில்களைத் துவங்குவது முடியாமல் இருக்கிறது.

எனவே, இங்கு, தொழில் துறையில் வடநாட்டைவிடப் பலமடங்கு பின்தங்கிக் கிடக்கின்ற இப்பகுதியில், நானாவிதமான தொழில்களைத் துவங்குவதற்கு இன்றியமையாத் தேவையாக இருக்கின்ற மின்சாரத்தைப் பெருக்க வேண்டும் என்பது கட்டாயமாக இருக்கிறது.

மின்சார உற்பத்தி பெருக்கப்பட்டால் அல்லாது, தொழில்துறையில் தென்னாட்டிற்கு விமோசனம் ஏற்படாது என்ற நெருக்கடியான நிலைமை இருந்துவருகிறது. ஆதலால் தென்னாட்டைத் தொழில் மயமாக்குவதற்கு மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டியது இந்தியப் பேரரசின் நீங்காக் கடமையாகிறது.

இந்த நியாயத்தை இந்தியப் பேரரசு அறியாது எனக் கூறுவதற்கில்லை. அறிந்திருந்தும தென்னாட்டு மக்களுக்குத் தான் ஆற்றவேண்டிய கடமையைச் செய்யாது இதுவரை வேண்டுமென்றே காலந்தாழ்த்தி வந்திருக்கிறது இந்தியப் பேரரசு என்பதே நமது முடிவு.

குந்தா நீர் மின்சார உற்பத்தித் திட்டத்திற்கு இப்பொழுது உதவி செய்ய முன்வந்த கனடா நாடு அப்பொழுதும் இருக்கத்தான் இருந்தது. இன்று தர முன்வரும் கனடாவின் உதவியை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்ற கொழும்பு திட்டம் அன்றும் நடைமுறையில் இருக்கத்தான் இருந்தது என்பதை, இத்தருணத்தில் நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். நிற்க,

தென்னாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படாததற்கு, மின்சாரப் பற்றாக்குறைதான் காரணம என்பது ஒரு காரணம். மற்றொரு காரணமாக இருந்துவருவது நிலக்கரி இல்லாமை.

வடநாட்டின் தொழில் முன்னேற்றத்திற்கு, அங்கு ஏராளமாக நிலக்கரி கிடைக்கிறதே மூலகாரணமாகும் என்று நியாயம் பேசப்படுகிறது.

வடநாடு தொழில் துறையிலும் வளர்ச்சி பெற்றிருக்கிறது; நிலக்கரியும் ஏராளமாகக் கிடைக்கிறது. இவ்விரண்டும் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

எனவே, தொழில் வளர்ச்சியும் நிலக்கரியும் கொண்டிருக்கின்ற வடநாட்டிற்கு, நீர் மின்சார உற்பத்திப் பெருக்கம் இரண்டாம் பட்சத் தேவையேயாகும். ஆனால், தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கின்ற தென்னாட்டில் நிலை அதுவல்ல.

இங்கு நிலக்கரி கிடைக்கப் பெறாததால் தொழில் முன்னேற்றம் பல ஆண்டுகளாகத் தடைபட்டுக் கிடக்கிறது. எனவே, நீர் மின்சாரம் அல்லது எரி மின்சார உற்பத்திப் பெருக்கம் இன்றியமையா முதல் பட்சத் தேவையாகிறது.

இந்த நியாயப்படி, நிலக்கரி கிடைக்கப்பெறாத தென்னாட்டில் மின்சார உற்பத்திப் பெருக்கத்திற்கு முதற்கண் வழி செய்ய வேண்டியதைத்தான் இந்தியப் பேரரசு மேற்கொண்டு இருக்க வேண்டும் என, நியாய புத்தி படைத்தவர் அனைவரும் கூறுவர். ஆனால், இந்தியப் பேரரசோ, தென்னாட்டில் மின்சார உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி செய்து, தென்னாட்டின் தொழில் வளர்ச்சிக்கு வகை செய்வதற்குப் பதிலாக, தொழில்வளம் மிகுந்த வடநாட்டின் தொழில்வளத்தை மேலும் பெருக்குவதற்கான, நிலக்கரிக் குறைவை ஈடுசெய்வதற்கு மேலும் மேலும் மின்சார உற்பத்தியைப் பெருக்குவதில் தீவிரம் காட்டிவருகிறது!

இது நீதியா? நியாயமா? முறையா?

36 பள்ளிகளில் இலவச உணவு!

வாலாஜாபாத், சன. 3—
செங்கற்பட்டு மாவட்டத்தில் இலவசமாக மத்தியான உணவு தரும் திட்டம் 36 பள்ளிகளில் அமுல் செய்யப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சேதி, தெரியுமா?

ஹங்கேரியில் மணமாகாதவர்களிடமிருந்தும் மக்கட்பேறு இல்லாத தம்பதிகளிடமிருந்தும் வசூலிக்கப்பட்டுவந்த வரி சனவரி முதல் ரத்து செய்யப்பட்டுள்ளதாம்.

எதிர்க்கட்சியினரை தனிப்பட்ட முறையில் தரக்குறைவாகப் பேசும் போக்கு!

கைவிடுமாறு காங்கிரசாருக்கு இதோபதேசம்!

உண்மையை ஒப்பி உபதேசம் புரியும் இந்தூர் காங்கிரஸ் தீர்மானம்

இந்தூர், சன. 4—
காங்கிரசார், எதிர்க் கட்சிக்காரர்களை இதுகாறும் தனிப்பட்ட முறையில் வாய்க்கு வந்தபடி ஏசிவந்திருக்கிறார்கள் என்ற உண்மையை ஒப்பும் வகையிலும், இனி, காங்கிரசார் அதுபோன்று எதிர்க்கட்சியினரைத் தனிப்பட்ட முறையில் தாக்கக்கூடாது என்று உபதேசம் செய்யும் வகையிலும் ஒரு தீர்மானம், இந்தூர் மாநாட்டுத் தீர்மானங்களுள் ஒன்றாகக் கொண்டுவரப்பட்டுள்ளது.

"பொது வாழ்வில் மட்டுமின்றி தனிப்பட்ட வாழ்க்கையிலும் உயர்ந்த தரம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறது. எனவே, காங்கிரசார் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடும்போது, கசப்பை வளர்க்கக்கூடிய—தனிப்பட்டவர்களைத் தாக்கி இழிவாகப் பேசும் முறையைக் கைக்கொள்ளக் கூடாது; பிரச்சாரம், காங்கிரசின் இலட்சியம்—சாதனை இவற்றை விளக்குவதாகவே இருக்க வேண்டும்—எதிர்த்து நிற்கும் அபேட்சகர்களைப் பற்றி தனிப்பட்ட முறையில் தரக்குறைவான தாக்குதலில் ஈடுபடக்கூடாது" என்று அந்தத் தீர்மானம் கூறுகிறது.

காலத்தை ஒப்பிட்டுக் காட்டுகிறார் பண்டிதர்

"ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்பு 'நிலவிய நிலைமைகளை வைத்துக்கொண்டு கார்ல் மார்க்ஸ் 100 ஆண்டுகளுக்கு முன்பு எழுதினார். இப்பொழுதோ உலகம் மாறிவிட்டது. ஆகையால் அவருடைய அந்தத் தத்துவங்கள் இந்தக் காலத்திற்குப் பொருந்தாது; அதிலும் இந்தியாவின் இப்போதைய நிலைமைக்கு வெகுவாகப் பொருந்தாது. உலக நிலைமையும் வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது" என்று, பண்டித நேரு காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் ஒரு கப்பல் கட்டும் தொழிற்சாலையா?

புதுடில்லி சன. 4—
இந்தியாவில் இரண்டாவது கப்பல் கட்டும் துறை ஒன்றை நிர்மாணிப்பதற்கான திட்டம் வகுப்பதற்குப் பிரிட்டிஷ் நிபுணர்கள் குழு ஒன்றை அனுப்புவதாக பிரிட்டன் கூறிய யோசனையை டில்லிப் பேரரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது

கொழும்புத் திட்டத்தின்கீழ் இந்த உதவியை அளிப்பதற்குப் பிரிட்டன் முன்வந்துள்ளதாகத் தெரிகிறது.

'வடநாட்டுப் பெருமுதலாளிகளுக்கு பாதுகாப்பளிப்போம்'

'அவர்களது நியாயமான உரிமைகளுக்கு உத்தரவாதம் தருவோம்'

கம்யூனிஸ்டு தேர்தல் அறிக்கையில் காணப்படுபவை!

புதுடில்லி, சன. 3—
"நமது இன்றைய அபிவிருத்தி கட்டத்தில், தேசபக்தி கொண்ட இந்திய முதலாளிகள், நமது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமான பங்கு செலுத்தமுடியும் என்பதைக் கம்யூனிஸ்டு கட்சி அங்கீகரிக்கிறது.

"வெளிநாட்டுப் போட்டியிலிருந்து இந்திய தொழில்கள் காப்பாற்றப்பட வேண்டும்; முதலாளிகளின் எல்லா நியாயமான உரிமைகளுக்கும் உத்தரவாதம் தரப்படல் வேண்டும்; தேசிய புனரமைப்புக்கான நமது திட்டத்தை அமுல் செய்வதில் அவர்களது (முதலாளிமார்களது) தீவிர ஒத்துழைப்பையும் தேடிப் பெறவேண்டும் என்று கம்யூனிஸ்டுக் கட்சி ஆவல் கொண்டுள்ளது,"

என்பதாக அகில இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, தனது தேர்தல விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மேலும் அந்த விஞ்ஞாபனத்தில், 'பிரகடனப்படுத்தப்பட்டுள்ள திட்டத்தின் நோக்கங்களும் இலட்சியங்களும் பாராட்டப்பட வேண்டியவைதான் என்றாலும், திட்டங்கள் ஓரளவுக்குப் பயன் தருபவைதான் என்றாலும்...' என்று துவங்கி, திட்டத்தின் கோளாறுகள் சிலவற்றை எடுத்துரைக்கிறது என்றும், நிலச் சட்டம் பற்றியும், தேசியக்குறைந்த பட்ச சம்பள நிர்ணயம் பற்றியும், மொழி வழி மாநில அமைப்பை வற்புறுத்தியும் கட்சியின் நோக்கங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிய வருகிறது.

சுதந்திர ஈராக் சர்க்கார் உருவாகுமா?

கெய்ரோ, சன 3—
இன்னும் 10 நாட்களில் சுதந்திர ஈராக் சர்க்கார் ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் உருவாகி வருவதாகச் செய்திகள் மூலம் தெரியவருகிறது.

மருத்துவக் கல்லூரிப் படிப்பின் 'தரம்' உயராததற்குக் காரணம்?

இரண சிகிச்சை நிபுணர்கள் கழகத் தலைவர் விளக்கம்

"நாட்டில் மருத்துவர்களின் பற்றாக்குறை இன்னமும் இருந்து வருகிறது; இச்சிக்கலுக்குத் தீர்வு காண ஆட்சியாளர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். ஒரு சில மருத்துவ ஆராய்ச்சிக் கல்லூரிகள் திறப்பதால் மட்டும் இந்தப் பற்றாக்குறை தீர்ந்துவிடாது" என்று இந்தூரில் நடைபெற்ற இந்திய இரண சிகிச்சை நிபுணர்கள் கழகத்தின் 18-வது மாநாட்டில் பேசுகையில், கழகத் தலைவர் டாக்டர். ஜே. எஸ் மேத்தா குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார்:—

'இந்தியாவிலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் உயர்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை; ஆகவே, இந்தியாவில் மருத்துவக் கல்லூரிப் படிப்பின் தரம் உயரவில்லை.

"அரசாங்க மருத்துவக் கல்லூரிகளில் ஆசிரியராகப் பணியாற்றும் மருத்துவர்களின் ஊதியம் ஒரே சீராக இருக்கவேண்டும். ஊதியம் ஒரே அளவாக நிர்ணயிக்கப்படாவிட்டால் ஆசிரியர்கள், மருத்துவக் கல்லூரிகளில் உண்மையுடன் உழைக்கமாட்டார்களென்பது திண்ணமாகும்.

"மருத்துவக் கல்லூரியை ஒட்டி அமைக்கப்படும் மருத்துவ நிலையங்கள் வணிகச் சந்தைகளாக மாறக் கூடாது."

சோஷலிஸ்டுக் கட்சி 400 இடங்களில் போட்டியிடும்

அலகாபாத், சன 3—
'மாநில சட்டசபைகளுக்கு 350 முதல் 400 இடங்களுக்கும், மக்கள் சபைக்கு 40 முதல் 50 இடங்களுக்கும் அகில இந்திய சோஷலிஸ்டுக் கட்சி அபேட்சகர்களை நிறுத்தும்,' என்று கட்சித் தலைவர் சாக்சேனா கூறியிருக்கிறார்.

கழகச் செய்திகள்

யாழ்ப்பாணம் தி.மு.கழகம்

16-12-56 மாலை 3½ மணிக்கு, யாழ்ப்பாணம் ஸ்டான்லி பில்டிங்கில், இரா. திருமறவன் தலைமையில் நடைபெற்றக் கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், டாக்டர் அம்பேத்கார், இசைப்பெரும் புலவர் இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், பொருளாளர் தோழர் கரிகாலன், கழகச் சட்டதிட்டங்களுக்கு முரணாக நடந்துகொண்டதையொட்டி பதவியிலிருந்து நீக்கப்பட்டதுடன், தோழர் ஆறுமுகம் புதிய பொருளாளராக நியமிக்கப்பட்டும், அவரது தலைமையில் கழக நிதி திரட்ட ஐவரடங்கிய குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேலும் இந்த சனவரி இறுதிக்குள் தி. மு. க. பொதுக் குழுவை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு தி. மு. க. தலைமை நிலயத்தைக் கேட்டுக்கொண்டும், தோழர்கள் இரா. திருமறவன், இராவணன் ஆகியோர் பொதுக்குழு பிரதிநிதிகளாகவும், தோழர்கள் சங்கரசுப்பு, சண்முகதாசன், சங்கமாறன், வைத்தியநாதன், வேல்சாமி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும், இம்மானுவேல், செ. ச மூர்த்தி, அருள், செழியன் ஆகியோர் பிரச்சாரக் குழுவினராகவும், ஆறுமுகம், வேல்சாமி, முத்தையா, முழுமதி, மதிமுகம் ஆகியோரடங்கிய நிதிக் குழுவும், தோழர் சங்கமாறன் தொண்டர்படைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

போளூர் (வ. ஆ.) தி.மு.க.

18—12—56 இரவு 9 மணிக்கு தோழர் செங்குபட்டர் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், டாக்டர் அம்பேத்கார், இசைப் பெரும் புலவர் இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர், தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக்காகக் கலைநிகழ்ச்சி நடத்தி நிதி திரட்டத் தோழர்கள் போளூர் கே. சுப்பிரமணியம், கணபதி, பி. செங்குபட்டர், பி கிருட்டிணன், ஜெ பி. சீனுவாசன் சி. எத்திராசு, எம். சின்னக்கண்ணு, எம் சக்ரபாணி, ஜி கே. சாமி ஆகியோரைக் கொண்ட நிதிக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

புறக்கோட்டை (இலங்கை) தி. மு. கழகம்

19-12-56 இரவு 8 மணிக்கு, தோழர் எஸ் பி. அருணாசலம் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கிராண்ட்பாஸ், புறக்கோட்டை கிளைக் கழகங்கள் சார்பில் பொங்கல் விழா' சிறப்பாக நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டதுடன், நாதசுர இசைமன்னர் இராசரத்தினம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒண்டிப்புதூர் தி. மு. க.

21—12—56-ல் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கிளைக் கழகத் துணைச் செயலாளர் தோழர் எம். இராமசாமி, கழகக் கொள்கைகளுக்கு ஊறுநேரும் வகையில் நடந்துகொண்டதால், அவரை துணைச் செயலாளர், செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதுடன், ஓராண்டுக் காலத்திற்கு எவ்வித பொறுப்புக்கும் தகுதியற்றவர் என உறுதிப்படுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், சில அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சிவகாசியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

16—12—56 இரவு 7 மணிக்கு, சிவகாசியில் நடைபெற்றக் கழகப் பொதுக்கூட்டத்தில், சிவகாசி நகர் பிரபல தீப்பெட்டித் தொழிலதிபர் என். ஆர். கே. கே. இராசரத்தினம், டாக்டர் அம்பேத்கார், இசைப் பெரும் புலவர் இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வெள்ளூரில் தி. மு. கழக அமைப்பு

18—12—56 இரவு 8 மணிக்கு முசிரி வட்டம் வெள்ளூரில், தோழர் வி. கண்ணன் கடையில் தோழர் எஸ். செங்கோடன் தலைமையில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். வி. இராதாகிருட்டிணன், எஸ். செங்கோடன், ஏ. பாலசுப்பிரமணியன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குடந்தை 16-வது வட்ட தி. மு. க. கிளை அமைப்பு

22—12—56 இரவு 8 மணிக்கு, குடந்தை மோதிலால் தெருவிலுள்ள 'குடந்தை டீ ஸ்டாலி'ல் தோழர் எஸ். ஏ. லைனுமுகமது தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக அமைப்புக் கூட்டத்தில் தோழர்கள் பி. வி. செயராமன், ஏ. எம். லூயி, ஏ. முகம்மது உசேன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆரம்ப விழா

23—12—56 மாலை 5 மணிக்கு, மேற்படி கழகத் துவக்க விழா, தோழர் எஸ். ஏ. லைனு முகமது தலைமையில் நடைபெற்றது தோழர் கே. கே. நீலமேகம் விழாவைத் துவக்கிவைத்தார். தோழர் அ. பத்மநாபன் கழகக் கொடி ஏற்றுவித்தார். தோழர்கள் சி. பி சிற்றரசு, ஏ. எம். லூயி, காளிதாசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர் அவ்வட்டத் தெருக்கள், குளங்களை உடனடியாகச் சுத்தம் செய்யுமாறு நகராண்மைக் கழகத்தினரைக் கேட்டுக்கொண்டும், டாக்டர் அம்பேத்கார், இராசரத்தினம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. கூட்ட ஆரம்பத்தில் தோழர் எல். டி. கிட்டப்பா குழுவினரின் 'சிந்தித்துப்பார்' நாடகம் நடைபெற்றது.

பிள்ளையார்குப்பம் தி.மு.க. திறப்பு விழா

22—12—56 மாலை 6 மணிக்கு புதுவை வட்டம் பாகூர் கொம்யூன் மேற்படி கிராமத்தில், தோழர் சு. சிவப்பிரகாசம் தலைமையில் தி. மு. கழகக் கிளை திறப்பு விழா நடைபெற்றது. தோழர் சு. பெருமான் கழகக் கொடியை ஏற்றிவைத்தும், தோழர் அ. பொன்னம்பலனர் கழகத்தைத் திறந்துவைத்தும் சொற்பொழிவாற்றினர்.

கிருமாம்பாக்கம் தி. மு. க. திறப்பு விழா

22—12—56 இரவு 8 மணிக்கு புதுவை வட்டம் கிருமாம்பாக்கத்தில் தோழர் சு. பெருமான் தலைமையில் கிளைக் கழகத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் சு. சிவப்பிரகாசம் கழகக் கொடியை ஏற்றிவைத்தும், தோழர் அ. பொன்னம்பலனர் கழகத்தைத் திறந்துவைத்தும் சொற்பொழிவாற்றினர்.

மதகடிப்பட்டு தி. மு. கழக திறப்பு விழா

23—12—56 மாலை 6 மணிக்கு புதுவை வட்டம் மண்ணாடிப்பேட்டை கொம்யூன் மதகடிப்பட்டில், தோழர் சு. சிவப்பிரகாசம் தலைமையில், கிளைக் கழகத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் சு. பெருமான் கழகக் கொடியை ஏற்றுவித்தார். தோழர் அ. பொன்னம்பலனர் சொற்பொழிவாற்றினர்.

சேலம் நகர 30-வது வட்ட ஆண்டு விழா

23—12—56 மாலை 6½ மணிக்கு சேலம் நகர 30-வது வட்டத் தி. மு. கழக 4-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் கருங்கல் பட்டியில், தோழர் அ. இரங்கசாமி தலைமையில் நடைபெற்றது. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் இ ஆர். கிருஷ்ணன், வி. சிவப்பிரகாசம், எஸ். மெய்யப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

குனியமுத்தூர் தி. மு. க.

23—12—56 இரவு 8 மணியளவில், குனியமுத்தூர் தி. மு கழகப் பொது உறுப்பினர் கூட்டம், தோழர் தங்கமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. தேர்தல் நிதிக்கு மேற்கொண்டும் நிதி சேர்ப்பதென்றும், சனவரி இரண்டாவது வாரத்தில் பொங்கல் விழா கொண்டாடுவதெனவும், டாக்டர் அம்பேத்கார், இராசரத்தினம், விசாலாட்சி—இளம்வழுதி, மதனகோபால் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவில்லிப்புத்தூர் வட்ட தி. மு. கழகம்

23—12—56ல், திருவில்லிப்புத்தூர் வட்ட தி. மு. கழகக் குழு உறுப்பினர் கூட்டம், இராசபாளையம் தி. மு. கழக அலுவலகத்தில், தோழர் இராமதாசு தலைமையில் நடைபெற்றது. திருவில்லிப்புத்தூர் வட்டக் கிளைக்கு உடனடியாகத் திருவில்லிப்புத்தூரில் ஒரு கட்டிடம் வாடகைக்கு அமர்த்தி அலுவல்களைக் கவனிப்பதென்றும், தேர்தல் நிதிக்கெனச் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டமொன்று நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கட்டிமேடு தி. மு. கழகம்

24—12—56-ல், தோழர் ஜி எஸ். மூர்த்தி இல்லத்தில், தோழர் முகமது தலைமையில் நடைபெற்றக் கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில், டாக்டர் அம்பேத்கார், இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், விரைவில் தேர்தல் நிதி அனுப்பி வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

காடையாம்பேட்டை தி. மு. கழகம்

24—12—56 மாலை 6 மணிக்கு, கிளைக் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் சா. பழனியப்பன் இல்லத்தில், தோழர் ஆர். சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்: ஆர். மாரிமுத்து; துணைச்செயலாளர்: ஏ. மாரிமுத்து; பொருளாளர்: க சாமிநாதன்; மாவட்டப் பிரதிநிதி: கா. கந்தசாமி.

சிங்காநல்லூர் தி. மு. க.

27—12—56 மாலை 7½ மணிக்கு சிங்காநல்லூர் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 'இளவேனிற் கலா மன்றத்'தில் நடைபெற்றது. டாக்டர் அம்பேத்கார், இராசரத்தினம், விசாலாட்சி-இளம்வழுதி, காச்சிமுத்து ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

ஒட்டன்சத்திரம் தி. மு. க. தொகுதிக் குழு

24—12—56-ல், ஒட்டன்சத்திரத்தில், தோழர் எஸ் முத்து தலைமையில், ஒட்டன்சத்திரம் தி. மு. கழகத் தொகுதிக் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், தேர்தலில் கழகத்தின் பணிகள் குறித்துத் தோழர்கள் இரங்கசாமி, குப்புசாமி, முத்துசாமி, சடையப்பர், தங்கவேல், பன்னீர்செல்வம், கணபதி, நல்லகுமார், அம்மையப்பன், இரகீம், வடிவேல், காச்சிமுத்து ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

நெல்லிக்குப்பம் தி. மு. க.

26—12—56ல், நெல்லிக்குப்பம் தி. மு கழகப் பொது உறுப்பினர் அவசரக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெற்றது. கிளைச் செயலாளர் தோழர் மா. சோழன் அவர்களின் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தோழர் கி பாலவேலாயுதம் அவர்கள் தற்காலிகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முன்னாள் செயலாளர் ஆற்றின கழகப் பணிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

திருச்செங்கோடு தொகுதி தி. மு. கழக அமைப்பு

27—12—56ல், தோழர் எஸ் எஸ். எம். சவுண்டையப்பன் தலைமையில் திருச்செங்கோடு தொகுதி தி. மு கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. ஒக்கிலிப்பட்டி, குள்ளம்பட்டி, திருச்செங்கோடு, குமாரபாளையம், வேலகவுண்டம்பட்டி, வைப்பமலை, சின்னதம்பி பாளையம், காவேரி, கடையம்பட்டி, உலகப்பன் பாளையம், குமாரமங்கலம் ஆகிய கிளைகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பின்னர் தொகுதிக் குழு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் : எம். இராசன் (திருச்செங்கோடு); துணைச்செயலாளர் : எஸ். எஸ். எம்.சவுண்டைப்பன் (கொமாரபாளையம்); பொருளாளர் : என். ஏ. செங்கோட்டையன் (திருச்செங்கோடு).

எரியோடு பிர்க்கா தி. மு. க. துவக்க விழா

27—12—56 மாலை 6 மணிக்கு, எரியோடு பிர்க்கா தி. மு. கழகத் துவக்க விழா, சந்தைத் திடலில், தோழர் எம். காதர்சா தலைமையில நடைபெற்றது. தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் சொற்பொழிவாற்றினர். இடையில் பெருமழை பெய்ய ஆரம்பிக்கவே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

போடிநாயக்கனூர் தி. மு. கழகம்

29—12—56 இரவு 8 மணிக்குப் போடிநாயக்கனூர் தி மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் எம். என். இரத்தினம் புகையிலை மண்டியில், தோழர் எம். கந்தசாமி தலைமையில் நடைபெற்றது டாக்டர் அம்பேத்கார், இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. பின்னர் 28-7-56 முதல் 29-12-56 வரை உள்ள கிளைக் கழக வரவு-செலவுகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன

வைத்தியனுதபுரத்தில் தி. மு. கழக அமைப்பு

29-12-56-ல் மாயூரம் வட்டம் வைத்தியனுதபுரத்தில் தி. மு கழகக் கிளை அமைக்கப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: கே. எஸ் செகநாதன், துணைச்செயலாளர்: எம். குன்னையன்; பொருளாளர்: அரு. சோமசுந்தரம்; மாவட்டப்பிரதிநிதி: ஏ எம். துரை. மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கோவை 13-வது வட்ட தி. மு. கழகம்

31-12-56 இரவு 8 மணிக்கு, கோவை 13-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் கோ. மா மணி தலைமையில் நடைபெற்றது. பொங்கலன்று கிளைக் கழகத் துவக்க விழா நடத்துவதென்றும், தோழர் ப. பெரியசாமி தலைமையில் தோழர்கள் இரா. நடராசன், பாலசந்தரம், க வெற்றிவேந்தன் ஆகியோரடங்கிய நிதி வசூல் குழு அமைத்தும், கழகக் கட்டிடத்தில் ஒரு இலவசப் படிப்பகம் நடத்த அனுமதி அளித்தும் முடிவு செய்யப்பட்டதுடன், டாக்டர் அம்பேத்கார், இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சென்னை :

11-வது வட்ட தி.மு.க.

10-12-56 இரவு 8 மணிக்கு சென்னை 11-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. 22-9-56-ல் நடைபெற்ற விழாக்கூட்ட வரவு-செலவுகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், விரைவில் தேர்தல் நிதி தருவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

37-வது வட்ட தி. மு. க.

12-12-56 இரவு 10 மணிக்கு, தோழர் கோ. இளவரசு தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், டாக்டர் அம்பேத்கார், இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

44-வது வட்ட தி. மு. க.

22-12-56 இரவு 9½ மணிக்கு சென்னை 44-வது வட்டம் மயிலை தி மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் ஆர். அறிவழகன் தலைமையில் நடைபெற்றது. டாக்டர் அம்பேத்கார், இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

மேலக்கற்கண்டார்கோட்டை தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்டல்

16—12—56ல், பொன்மலை—மேலக்கற்கண்டார்கோட்டைபகுதியில் கிளைக் கழகச் செயலாளர் தலைமையில், தோழர்கள் தங்கவேலு, முருகன், மாணிக்கம், இராமானுசம் ஆகியோர் வேட்மணிந்து உண்டியலேந்தி பணமாகவும் தானியமாகவும் தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்டினர். மொத்தம் ரூ 42—2—0 கிடைத்தது.

திருப்பூர்நகர பனியன் பேக்டரி தி.மு.க. தொழிலாளர் தேர்தல் நிதிக் குழு

16—12—56 மாலை 6 மணிக்கு, திருப்பூர் பனியன் பேக்டரி தொழிலாளர்கள் சார்பில், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்குழு அமைப்புக் கூட்டம் தோழர் சு. துரைசாமி தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில், தேர்தல் நிதிக் குழுச் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகத் தோழர்கள் கே. எஸ். மணியம், ஆறுமுகம், பழனிசாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருத்தம்

சென்னை 31-12-56 (வெளியீர் 1-1-57) 'நம் நாடு' இதழ் 3-ம் பக்கம், 5-வது கலத்தில், 'காவேரி நகர் வட்டார விளையாட்டு விழா' என்ற தலைப்பில் வெளிவிடப்பட்ட செய்தியில், '16-12-56-ல் தொடையூரில், பொங்கல் விழாவையொட்டி....'என்றிருப்பதை, 16-1-57-ல் தொடையூரில்...' என்று திருத்தி வாசிக்கவேணுகிறோம்.

சென்னை மகளிர் மன்றம் — கலை நிகழ்ச்சி

15—1—57 மாலை 5-மணிக்கு
செயின்ட் மேரிஸ் மண்டபத்தில்

அண்ணா அவர்கள் தலைமையில்
நடைபெறும்

★

எஸ்.எஸ். இராசேந்திரன், டி.வி. நாராயணசாமி
நடிக்கும்

'உதய சூரியன்' நாடகம் — மு. கருணாநிதி எழுதியது

★

நடிகை இராஜசுலோசனா பங்கேற்கும்
'தேசிங்குராஜன்' ('ரங்கோன் ராதா')

★

நடிகை குசலகுமாரியின் நடன நிகழ்ச்சியும் நடைபெறும்

நுழைவு நன்கொடை : ரூ. 10, 5, 3, 2, 1.

வெற்றிச்செல்வி-அன்பழகன்
புவனேசுவரி-நடராசன்
செயலாளர்கள்

சத்தியவாணிமுத்து
தலைவர்

சென்னை துறைமுகத் தொழிலாளர்களுக்கு வேண்டுகோள்

சென்னை துறைமுகத் தொழிலாளர்கள் சார்பில் அளிக்கப்படவிருக்கும் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கென அச்சடிக்கப்பட்டு, தலைமை நிலைய முத்திரையோடு உள்ள நன்கொடை இரசீதுகளை சென்னை துறைமுகத்திலுள்ள கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் வாங்கி ஆதரிக்குமாறு தேர்தல் நிதிக் கமிட்டி (துறைமுகம்) அன்போடு கேட்டுக் கொள்கிறது.

மக்கள் பொதுநல மன்றத் திறப்பு விழா

6-1-57 மாலை 5½ மணியளவில் சென்னை—பரங்கிமலை மக்கள் பொதுநல மன்றத் திறப்பு விழா பரங்கிமலை பட் ரோடில், திரு. நாரண-துரைக்கண்ணன் தலைமையில் நடைபெறும். திரு. எச். டி. இராசா எம்.பி., க. அன்பழகன் பேசுவர்.

பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

சென்னை S. I. A. A. திடலில் : 6-1-57 மாலை 6-30மணிக்கு
திறந்தவெளி சகுந்தலா கலை அரங்கில்
திரு ஜி இராஜமன்னார் பி.ஏ., எம்.சி. அவர்கள் தலைமையில்
எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் அளிக்கும்
'மணிமகுடம்' தமிழ் நாடகம்

தனிப்பகுதி : ரூ. 3, 2, 1, அணா 8. திறந்தவெளி இலவசம்
சென்னை கவர்னர் உயர்திரு ஏ ஜே ஜான் அவர்கள் பாராட்டிய உஷா வீணை வாத்தியம், சர்க்கஸ், தந்திரக்காட்சி, ஓவியக்கலை, பம்பாய் நடனம், பொம்மலாட்டம், இராட்டினம், மயில் தஞ்சாவூர் குதிரைகள் நாட்டியம், மறுபிறவி மகாத்மா காந்தி, தேகப் பயிற்சி, சைக்கிள் விளையாட்டு—மற்றும் பல.

7—1—57 திங்கள் மாலை 6-30 மணிக்கு
திறந்தவெளி சகுந்தலா கலை அரங்கில்
திரு. என். ஜீவரத்தினம் தலைமையில்
எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் அளிக்கும்
'புது வெள்ளம்' தமிழ் நாடகம்

8—1—57 மாலை 6-30 மணிக்கு : குமாரி ஈ. வி. சரோஜா
பரத நாட்டியமும், ஓரியண்டல் நடனமும்

பொருட்காட்சி பகல் 2 மணி முதல் இரவு 9 மணிவரை.
பிரவேசக் கட்டணம் 0—5—0

எம். எஸ். மோகன்—காண்டிராக்டர்

தேர்வுக் குழு
சுற்றுப்பயணம்

★

திருச்சி மாவட்டம்:

"தி. மு. கழக அபேட்சகர் தேர்வுக் குழு உறுப்பினரான தோழர் என். வி. நடராசன் அவர்கள் திருச்சி மாவட்டச் செயலாளர் அம்பில்-தருமலிங்கம் அவர்களுடன் 6—1—57 பிற்பகல் 2-மணிக்கு திருச்சி நகரில் திருச்சி மாவட்டத்திற்காக பொதுத் தேர்தலுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபடுவார்.

தஞ்சை மாவட்டம்

7—1—57 திங்கள் காலை 10 மணிக்கு, தஞ்சை நகரில் தி. மு. கழகத் தேர்வுக் குழு உறுப்பினர் என். வி. நடராசன் அவர்கள், மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ அவர்களுடன் தஞ்சை மாவட்டத்திற்கு, பொதுத் தேர்தலுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியினைத் துவங்குவார்.

குறிப்பு:— மேற்கண்ட தொகுதிகளிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களும், கழக முக்கியஸ்தர்களும், தேர்தலுக்கு நிற்க விருப்பம் தெரிவித்துள்ள அபேட்சகர்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து காணுமாறு அபேட்சகர் தேர்வுக் குழுவால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

****-***-**********

துன்பத்தைத் துடைக்க இயலாத சித்தாந்தங்கள்!

இலட்சுமிபாய்நகர், சன. 3—
"வயல்களிலும் ஆலைகளிலும், உற்பத்திச் செல்வம் பெருகினால் தான் நாட்டின் செல்வம் உயரும்; எந்த அரசியல் சித்தாந்தம்—பொதுவுடைமை, முதலாளித்துவம் சோஷலிசம், காந்தீயம்—பற்றிப் பேசலாம்; ஆனால் உற்பத்தி பெருகாவிட்டால் இவற்றால் பயன் ஒன்றும் விளையாது; வெறும் அரசியல் சித்தாந்தங்கள் மட்டும் மக்களுடைய துன்பத்தைத் துடைத்துவிட முடியாது. உண்மையான உழைப்பும், உற்பத்தி பெருக்கமும் முக்கியமாகத் தேவை" என்று பண்டித நேரு இங்கு பஞ்சாயத்து மாநாடு ஒன்றில் பேசுகையில் வலியுறுத்தியுள்ளார்.

கழகக் கூட்டம்

★

நல்லூர் :
(விருத்தாசலம்)
6—1—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்
சி. முனுசாமி

★

அய்யம்பாளையம் :
அழகிரி திடலில்
7—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : கே. எஸ். மலையப்பன்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
டி. பி. மூர்த்தி
டி. ஆர். முத்துசாமி

★

குன்னத்தூர் :
7—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : வேதநாயகம்
பேசுவோர்:
ஏ. எல். சி. கிருட்டிணசாமி
வே. அ. இளஞ்செழியன்

★

மதுராந்தகம் :
போலீஸ் திடலில்
8—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : எம். ஜி. கே. சாமி
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
தி. ந. சம்பந்தம்
கோ. கோதண்டம்

சென்னை 16-வது வட்டத்தில் கோவிந்தன் நாடகக் குழுவினர் தி. மு. கழகத் தேர்தல் நிதி வசூல்

6-1-57 காலை 8 மணி முதல், சென்னை 16-வது வட்டம் முழுமையிலும் மாஸ்டர் ஆர். கோவிந்தன் நாடகக் குழுவினர், பல பல வேடங்களணிந்துகொண்டு வீதி வீதியாக ஊர்வலம் வந்து உண்டியல் மூலம் தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்டுவார்கள்.

மக்கள் முன்னேற்றக் கட்சிப் பொதுக்கூட்டம்

6—1—57 மாலை 6 மணிக்கு சென்னை — திருவல்லிக்கேணி கடற்கரையில், மக்கள் முன்னேற்றக் கட்சியின் சார்பில், பொதுக் கூட்டம் நடைபெறும். திரு. எஸ். செல்லசாமி பேசுவார்.

கைத்தறி பதிவு செய்யும் காலவரம்பு நீடிப்பு

புதுடில்லி, சன 3—
கைத்தறிகளைப் பதிவுசெய்து கொள்ளுவதற்கு மனுக்கள் பெற்றுக்கொள்வதற்கான காலவரம்பு, பிப் 28-ந் தேதிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

தேர்வுக் குழு - சுற்றுப் பயணம்

★

தென் ஆற்காடு மாவட்டம்:

தி. மு. க. அபேட்சகர் தேர்வுக் குழுவின் தலைவரான பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி அவர்களும் கீழ்க்கண்ட தொகுதிகளில் நிலைமையைக் கண்டறிந்து அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கக் கீழ்க்கண்டவாறு சுற்றுப் பயணம் செய்வார்கள் :—

6—1—57 காலை 10 மணி :
இடம் : 'தம்பி' அலுவலகம், சிதம்பரம்
தொகுதி : சிதம்பரம், சேத்தியாத்தோப்பு தொகுதிகள்

6—1—57 மாலை 5 மணி :
இடம் : வழிப்போக்கர் விடுதி, விருத்தாசலம்
தொகுதி : விருத்தாசலம், நல்லூர் தொகுதிகள்

7—1—57 காலை 9 மணி :
இடம் : வழிப்போக்கர் விடுதி, செஞ்சி
தொகுதி : சத்தியமங்கலம், செஞ்சி தொகுதிகள்

7—1—57 மாலை 3 மணி :
இடம் : வழிப்போக்கர் விடுதி, திண்டிவனம்
தொகுதி : திண்டிவனம் தொகுதி

குறிப்பு :— மேற்கண்ட தொகுதிகளிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களும், கழக முக்கியஸ்தர்களும், தேர்தலுக்கு நிற்க விருப்பம் தெரிவித்துள்ள அபேட்சகர்களும் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் வந்து காணுமாறு பொதுச்செயலாளரால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

★

நெல்லை, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்கள் :

தி. மு. க. அபேட்சகர் தேர்வுக் குழு உறுப்பினர்களான தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எஸ். முத்து ஆகிய இருவரும் மேற்கண்ட மூன்று மாவட்டங்களிலும் நிலைமையைக் கண்டறிந்து பொதுத் தேர்தலுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கக் கீழ்க்கண்டவாறு சுற்றுப்பயணம் செய்வார்கள் :—

10—1—57 : இடம் : திருநெல்வேலி
தொகுதி : நெல்லை, நாஞ்சில் மாவட்டத்தைச் சார்ந்த தொகுதிகள்

11—1—57 : இடம் : விருதுநகர்
தொகுதி : இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த தொகுதிகள்

12—1—57 : இடம் : மதுரை
தொகுதி : மதுரை மாவட்டத்தைச் சார்ந்த தொகுதிகள்

குறிப்பு:— மேற்கண்ட தொகுதிகளிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களும், கழக முக்கியஸ்தர்களும், தேர்தலுக்கு நிற்க விருப்பம் தெரிவித்துள்ள அபேட்சகர்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து காணுமாறு அபேட்சகர் தேர்வுக் குழுவால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*****-**************-**********-****-****

தேர்தல் நிதி அளிப்பு கூட்டம்

7—1—57 மாலை 5 மணிக்கு, செங்கற்பட்டு தி. மு. கழகச் சார்பில், செங்கற்பட்டு தர்கா திடலில், தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், டி. என். சம்பந்தம், ஜே. ஏ. வகாப், கே. இ. சம்பந்தம், சி. இ. பலராமன் ஆகியோர் பேசுவர்.

சென்னையில் நாடகக் கலை விவாத அரங்கு

6—1—57 காலை 9½ முதல் மாலை 5 மணிவரை, சென்னை வி. பி மண்டபத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள வெள்ளி விழாப் பந்தலில், இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொசைட்டியின் ஆதரவில் தென்னிந்திய நடிகர் சங்கத்தினரால் நாடகக் கலை விவாத அரங்கு, திரு. டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் நடைபெறும் திரு. ஆர் சீனிவாசன் அரங்கத்தைத் திறந்துவைப்பார். காலை 9½ முதல் பகல் 1 மணிவரை, திரு. வி. சி. கோபாலரத்தினம், மு. கருணாநிதி, ஈ. கிருஷ்ணய்யர், எஸ். வி. சகஸ்ரநாமம், கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் ஆகியோர் முறையே கதை அமைப்பு, உரையாடல், சங்கீதம், நடிப்பு, நகைச்சுவை ஆகியவை குறித்தும், பிற்பகல் 2½ முதல் 5 மணிவரை, திரு. டி. கே. கிருஷ்ணசாமி புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், கலாசாகரம் ராசகோபால், டி. கே. சண்முகம் ஆகியோர் முறையே ஆசிரியம் (டைரக்ஷன்), பிரச்சாரம், காட்சி அமைப்பு, வளர்ச்சி ஆகியவை குறித்தும் கருத்துரை வழங்குவர்.

சென்னை 36-வது வட்ட தி. மு. க. உறுப்பினர்கட்கு

6-1-57 காலை 10 மணிக்கு, சென்னை 36-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம், சென்னை—சோலையப்பநகர், கோடம்பாக்கம் ஐரோட், எண் 95, தோழர் ஏ. சி. இராசரத்தினம் இல்லத்தில் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.